பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 11 புதன்கிழமை 28.10.2020 கதிர் 223

## 10 கிலோ கஞ்சாவுடன் புத்தளத்தில் 2 பேர் கைது

சுமார் 12 லட்சம் ரூபா பெறுமதியுடைய கேரளக் கஞ்சாவை விற்பனைக்காக ஓட்டோவில் எடுத்துச் சென்ற சந்தேக நபர்கள் இருவர் புத்தளம் கரம்பை பிரதேசத்தில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாலாவி மற்றும் புழுதிவயல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு 2

## பொறுப்புக்கூறலிருந்து தப்ப முடியாது இலங்கை

### ராஜபக்ஷெ அரசிடம் பொம்பியோ இடித்துரைப்பு

பொறுப்புக்கூறல் கடமையிலிருந்து இலங்கை ஒருபோதும் விலக முடியாது.

- இவ்வாறு ராஜபக்ஷ அரசிடம் இடித்துரைத்துள்ளார் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியா.

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நேற்றிரவு இலங்கை வந்த மைக் பொம்பியோ, இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்டோரைச் சந்தித்த பின்னர் கொழும்பில் ஊடகவியலாளர்களுடன் 2

## தன்னந்தனியே கோட்டா பொம்பியோவுடன் பேச்சு



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மைக் பொம்பியோ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை இன்று காலை சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் 2

## இலங்கையை சீனா வேட்டையாடுகிறது!

### கொழும்பில் நின்று பொம்பியா கடும் எச்சரிக்கை




இலங்கையை சீனா வேட்டையாடிவருகின்றது. அந்த நாடு நிலத்திலும் கடலிலும் இறையாண்மையை மீறி வருகின்றது.

- இவ்வாறு அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியா எச்சரித்தார். 2

## அமெரிக்கா இரட்டைவேடம்!

### பொம்பியோவுக்கு சீனா உடனடியாகவே பதிலடி




கொழும்பு, ஒக்.28

இலங்கையுடனான இராஜதந்திர அணுகு முறையில் அமெரிக்கா ஒரே நேரத்தில் இரண்டு வேடங்களைப் போடுகின்றது என கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கையை சீனா வேட்டையாடுகின்றது என்று இன்று கொழும்பில் வைத்து கருத்து வெளியிட்ட 2

## அனைத்து நாடுகளுடனும் இணைந்து பயணிப்பதே இலங்கையின் விருப்பம்

### பொம்பியோ முன் சமாளித்தார் தினேஷ்



கொழும்பு, ஒக்.28

அணிசேரா நாடு என்ற வகையில், அனைத்து நாடுகளுடனும் இணைந்து பயணிக்க இலங்கை தயாராகவே உள்ளது.

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அமெரிக்க இராஜாங்கச் 2

## சவேந்திர சில்வாவுக்கு எதிரான அமெ. பயணத் தடை தொடரும்!

### இலங்கையின் கோரிக்கையை நிராகரித்தார் பொம்பியோ

கொழும்பு, ஒக்.28

இறுதிப்போரில் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு விதிக்கப்பட்ட பயணத் தடையை மீள்பரிசீலனை செய்யுமாறு அமெரிக்காவிடம் இலங்கை கோரி 2

## வீடுகளிலேயே தனிமைப்படுத்தும் முடிவில் எவ்வித சிக்கலும் இல்லை

### பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

கொரோனா தொற்றுறுதி செய்யப்பட்டோருடன் தொடர்புகளைப் பேணிய முதலாவது தொடர்பாளர்களை வீடுகளிலேயே தனிமைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதில் எவ்வித சிக்கலும் கிடையாது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களை கண்காணிப்பது சுகாதாரத்துறையினருக்கும் பொலிஸாருக்கும் 2

## மேல் மாகாணத்தில் 3 நாள்கள் ஊரடங்கு

கொழும்பு, ஒக்.28

மேல் மாகாணம் முழுவதும் நாளை வியாழக்கிழமை நள்ளிரவு 12 மணி முதல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைக்கு வரும் என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார். 2

## கடந்த 24 மணித்தியாலத்தில் மேலும் 32 பேர் குணமடைவு

கொழும்பு, ஒக் 28

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 32 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 4,075 ஆக அதிகரித்துள்ளது. 2

## மஹிந்தவைச் சந்திக்காமல் கிளம்பினார் பொம்பியோ!

கொழும்பு, ஒக் 28

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்திருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ நாட்டில் இருந்து இன்று பிற்பகல் வெளியேறியுள்ளார். 2





கொழும்பு கொட்டாஞ்சேனை அந்தோனியார் தேவாலயத்தில் கடந்த வருடம் ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று குண்டு வெடிப்பில் உயிரிழந்தோருக்கு மைக் பொம்பியோ அஞ்சலி செய்த போது ....

## மணியின் பதவி பறிப்புக்கு இடைக்காலத் தடை விதிப்பு



யாழ்ப்பாணம், ஒக்.28

யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனை அந்தப் பதவியிலிருந்து நீக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தீர்மானத்துக்கு 14 நாள்கள் இடைக்காலத் தடை விதித்து யாழ்ப்பாணம் மாவட்டம் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் யாழ்ப்பாணம் மாநகர 2

## மணியின் பதவி பறிப்புக்கு ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைக்குத் தேர்ந்து அனுப்பப்பட்ட வி. மணிவண்ணன், தமது பங்காளிக் கட்சியான தமிழ் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து நீக்கப்பட்டமையால் மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குமாறு அந்தக் கட்சி யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கேட்டுக்கொண்டது. அதனடிப்படையில் வி.மணிவண்ணனின் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் பதவி வறிதாகியதாக யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலரால் அவருக்கு அறிவிக்கப்பட்டது.

தனது உறுப்புரிமை நீக்கத்தை சவாலுக்குட்படுத்தி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் சட்டத்தரணி வி.மணிவண்ணன், சிறப்பு மனுவை தானே தாக்கல் செய்தார் .

மனுவின் பிரதிவாதிகளாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவர் ஆனந்தராசா, பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகர் உள்ளிட்ட நான்கு தரப்பினரை மனுதாரர் குறிப்பிட்டிருந்தார்.

தனது பதவி நீக்கத்தை சட்ட வலுவற்றதாக உத்தரவிடுமாறு கோரிய மனுதாரர், அதன் மீதான விசாரணை நிறைவடைந்து இறுதிக் கட்டளை வரும் வரை இடைக்காலத் தடைக் கட்டளையை வழங்குமாறும் கோரியிருந்தார்.

இந்த மனு நேற்றுச் செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி வி.இராமக்கமலன் முன்னிலையில் அழைக்கப்பட்டது. மனுதாரரான சட்டத்தரணி வி.மணிவண்ணன், தனது மனுவை ஆதரித்து சமர்ப்பணத்தை முன்வைத்தார். இடைக்காலத் தடை உத்தரவை வழங்குமாறும் பிரதிவாதிகளை மன்றில் முன்னிலையாக அறிவித்தல் அனுப்புமாறும் அவர் கோரினார்.

மனுதாரரின் சமர்ப்பணத்தை ஆராய்ந்து இடைக்கால நிவாரணமான தடை உத்தரவு தொடர்பில் இன்று புதன் கிழமை கட்டளை வழங்குவதாக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் தவணையிட்டது.

மனு இன்று மாவட்ட நீதிபதி விநாயக மூர்த்தி இராமக்கமலன் முன்னிலையில் அழைக்கப்பட்டது.

மனுதாரரின் மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு பிரதிவாதிகளை நவம்பர்11ஆம்திகதிமன்றில்முன்னிலையாக அறிவித்தல் அனுப்ப உத்தரவிடப்படுகின்றது. மனுதாரரின் இடைக்கால நிவாரணமான அவரை யாழ்ப்பாணம் மாநகரசபைஉறுப்பினர்பதவியிலிருந்து நீக்கம் தீர்மானத்துக்கு 14 நாள்கள் இடைக்காலத் தடை உத்தரவு விதிக்கப்படுகிறது. - என்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி வி.இராமக்கமலன் கட்டளை வழங்கினார்.

## மேல் மாகாணத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் திங்கட்கிழமை அதிகாலை 5 மணி வரை ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில் விடுமுறை நாளான வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு தினங்களில் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

## இலங்கையை சீனா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகிரப்பட்ட ஜனநாயக விழுமியங்கள் மற்றும் இறையாண்மை உரிமைகளைப் பயன்படுத்துவது பற்றி இலங்கைக்கு அமெரிக்கா வேறுபட்ட பார்வையை வழங்குகின்றது. ஆனால், சீனா அதற்கு மாறாக ஒரு வித்தியாசமான பார்வையை வழங்குகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்டோரைச் சந்தித்த பின்னர் கொழும்பில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிலையானவளர்ச்சியுடன்இலங்கை மக்களுக்கு இறையாண்மையும் சுதந்திரமும் இருக்க வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகின்றது.

ஒரு நட்பு நாடாக அமெரிக்கா அதைச் சரியாக வழங்குகின்றது என்று நாங்கள் நினைக்கின்றோம்.

ஆனால், சீனா ஆக்கிரமிப்பு நோக்கத்தைக் கொண்டுள்ளது. இலங்கையை அந்த நாடு வேட்டையாடுகின்றது.

இலங்கையில் சீனாவின் இருப்பு குறித்து பல ஆண்டுகளாக கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன. குறிப்பாக இலங்கைக்கான சீனாவின் நிதிப் பங்களிப்பில் வெளிப்படைத்தன்மை இல்லாதது குறித்த கவலைகள் நீடிக்கின்றன.

இலங்கையுடனான தனது உறவை மேலும் வலுவாக்க சீனா முயன்று வருவதை அமெரிக்கா கவனித்து வருகின்றது. கொழும்பில் நடந்த பேச்சின் போது இது தொடர்பாக நாங்கள் விவாதித்தோம்.

நான் இந்தியா, மாலைதீவு மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கும் பயணத்தை மேற்கொண்டுள்ளேன்.

அனைத்து மத மக்களும் மனித உரிமைகள் மதிக்கப்படும் அமைதியான தேசத்தில் ஒன்றாக வாழ வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகின்றது.

கடந்த வருடம் தனது வெற்றி உரையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனக்கு வாக்களித்தவர்கள் மட்டுமல்ல, அனைத்து குடிமக்களுக்கும் தான் ஜனாதிபதி என்று கூறினார். எங்கள் இரு நாடுகளும் முன்னேறும்போது, அமெரிக்கா அந்த வார்த்தைகளை உண்மையாகக் கருதுகின்றது. - என்றார்.

## பொறுப்புக்கூறலிருந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை இலங்கை உறுதி செய்ய வேண்டும். இவை மிகவும் அவசியம். இந்தக் கடமைகளிலிருந்து இலங்கை ஒருபோதும் விலக முடியாது. - என்றார்.

## சவேந்திர சில்வாவுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்ற நிலையில், அதை அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மைக் பொம்பியோ நிராகரித்துள்ளார்.

இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா விதித்துள்ள பயணத் தடை தொடரும் என்று கொழும்பில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மைக் பொம்பியோ தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்க சட்டத்தின் பிரகாரமே பயணத் தடை விதிக்கப்பட்டது. சட்ட ரீதியாக அது சரியானது என்பதை மீண்டும் உறுதிப்படுத்த விரும்புகின்றோம்.

அவருடைய பயணத் தடையை விலக்கிக்கொள்வது குறித்து உடனடியாகப் பரிசீலிக்கப்படாது. - என்றார்.

## வீடுகளிலேயே ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய விடயமல்ல. நேற்று வரை சுமார் 35ஆயிரம்பேர்அவரவர்வீடுகளிலேயே சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். மார்ச் மாதம் தொடக்கம் தற்போது வரை ஒரு இலட்சத்து 85 ஆயிரத்துக்கும் அதிகமானோர் வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் தனிமைப்படுத்தப்பட்டனர்.

தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் அதற்கான உத்தியோகபூர்வ அறிவித்தல் சுகாதாரத்துறையினரால் ஒட்டப்படும். அந்த அறிவித்தல் ஒட்டப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் நியமிக்கப்பட்டுள்ள மக்கள் பொலிஸ் அதிகாரிகள் ஊடாக இந்தக் கண்காணிப்பு சேவைகளைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளோம். மக்கள் ஒத்துழைப்பு வழங்குவதோடு சட்டத்துக் கேற்ப அனைவரும் செயற்படுவார்களாயின் வீடுகளிலேயே தனிமைப்படுத்தல் பிரச்சினையாகாது. - என்றார்.

## கடந்த 24 மணி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள 8,413 பேரில் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களின் எண்ணிக்கை 4,776 ஆக காணப்படுகின்றது.

அத்தோடு 445 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளத்துடன் கொரோனா தொற்றினால் இதுவரை 19 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மஹிந்தவைச் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைக் பொம்பியோ நேற்றிரவு இலங்கைக்கு வருகை தந்திருந்த நிலையில், இன்று காலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் செய்தியாளர் மாநாட்டிலும் கலந்துகொண்ட அவர், கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்துக்கும் விஜயம் செய்தார்.

இந்தநிலையில், அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து இன்று பிற்பகல் 1.06 மணியளவில் விசேட விமானத்தின் ஊடாக மாலைதீவை நோக்கிப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

மைக் பொம்பியோ, இலங்கை விஜயத்தின்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் சந்திக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால், மஹிந்தவுடனான சந்திப்பை இரத்துச் செய்து விட்டு அவர் மாலைதீவு கிளம்பியுள்ளார்.

## அனைத்து நாடுகளுடனும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளருடன் கொழும்பில் இன்று இணைந்து நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்க இராஜாங்கச் செயலாளரின் வருகையானது, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவே கருதப்படுகின்றது.

இன்றுஉலகம்முழுவதும்கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. ஆசியாவிலேயே இலங்கைதான், பழமைவாய்ந்த ஜனநாயக நாடாகும்.

90 வருடங்களாக எமது மக்கள் வாக்குரிமையுடன் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த நாட்டின் ஜனநாயகம் இன்னும் பலமாகவே உள்ளது என்பதை இறுதியாக இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலும் பொதுத் தேர்தலும் காண்பித்துள்ளன.

இந்த நாட்டின் ஐக்கியம், நல்லிணக்கம், தேசியப் பாதுகாப்பு தொடர்பாக நாம் ஸ்திரமான நிலைப்பாட்டுடன் இருக்கின்றோம்.எமதுநட்புநாடுகளுடன்,இணைந்து பணியாற்றவும் நாம் உறுதியாகவே இருக்கின்றோம்.

அத்தோடு, பக்கச்சார்பற்ற அணிசேரா நாடாக இலங்கை தொடர்ந்தும் பயணிக்கும் என்பதையும் கூறிக்கொள்கின்றோம்.

அந்தவகையில், அமெரிக்காவுடனும் ஏனைய நாடுகளுடனும் இலங்கை உறவுகளை வளர்த்துக்கொள்ளும் - என்றார்.

## அமெரிக்கா இரட்டை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் சீனத் தூதரகம் ருவிட்டரில் இந்தப் பதிவை வெளியிட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ தனது 2 நாள் உத்தியோகபூர்வ பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்பில் இருந்து புறப்பட்டுள்ளார்.

முன்னதாக இன்று கொழும்பில் வெளியுறவு அமைச்சில் நடைபெற்ற கூட்டு ஊடக மாநாட்டில் உரையாற்றிய பொம்பியோ, சீனா ஒரு வேட்டையாடும் நாடு என்றும், நிலத்திலும் கடலிலும் இறையாண்மையை மீறுகிறது என்றும் கூறினார்.

அமெரிக்கா ஒரு நண்பராகவும் பங்காளியாகவும் இருந்து வருவதாகவும், ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையில் இலங்கையுடனான கூட்டணியை முன்னோக்கிக் கொண்டு செல்ல விரும்புவதாகவும் அவர் கூறினார்.

இந்தக் கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் சீனத் தூதரகம் வெளியிட்டுள்ள ருவிட்டில் இலங்கை நட்பையும் ஒத்துழைப்பையும் ஊக்குவிப்பதில் மும்முரமாக இருக்கிறோம், உங்கள் AlienVsPredator விளையாட்டு அழைப்பில் ஆர்வம் காட்டவில்லை. அமெரிக்கா எப்போதுமே ஒரே நேரத்தில் இரண்டு வேடங்களில் நடிக்க முடியும். - என்று குறிப்பிட்டுள்ளது.

## 10 கிலோ கஞ்சாவுடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய புத்தளம் பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்எனப்பொலிஸார்தெரிவித்தனர்.

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள புத்தளம் பாலாவி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே இதற்கு பின்னால் இருந்து வழிநடத்தினார் எனக் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

## தன்னந்தனியே கோட்டா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலெய்னா பி டெப்லிட்ஸும் கலந்து கொண்டார். இலங்கை அரசு சார்பில் வேறு எவரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவில்லை.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# விலை நிர்ணயம் அவசியம்

'பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதை' என்று கேள்விப்பட்டிருக்கின்றோம்.

அந்த நிலைமையில்தான் இலங்கை நாட்டு மக்கள் இன்று இருக்கின்றார்கள்.

கொரோனா வைரஸ் எனும் கொள்ளை நோய்ப் பரவலினால், இயல்பு வாழ்க்கையை இழந்து, வருமானத்தைத் தொலைத்து, அல்லல்படும் சாதாரண குடும்பங்களை விலைவாசி எனும் பேரரக்கனும் சேர்த்து அடித்துப் போட்டுத் துவட்டி எடுக்கும் அவலம் நேர்ந்திருக்கின்றது.

அத்தியாவசியப் பொருள்கள் விலை குறைப்பு என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்து பதினைந்து நாள்களாகின்றன. நிஜத்தில் எந்தப் பொருளினதும் விலை குறையவேயில்லை என்பதுதான் நிலைமை.

சீனி, சின்ன வெங்காயம், மீன் ரின் போன்றவற்றுக்கான வரி முழுமையாக நீக்கப்படுகின்றது என்றும் –

அதனால் சீனி கிலோ 85 ரூபாவுக்கும், வெங்காயம் கிலோ நூறு ரூபாவுக்கும் வாங்கக் கூடியதாக இருக்கும் என்றும் –

அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது. ஆனால் இரண்டு வாரங்கள் கடந்தும் அது நடைமுறையில் வரவில்லை என்பதுதான் துரதிஷ்டம்.

திடீரென அரசு வரியை விலக்கினால், அதுவரை வரி கட்டி இறக்குமதி செய்து, சந்தையில் வைத்திருக்கும் பொருள்களை வர்த்தகர்கள் என்ன செய்வது என்ற ஒரு கேள்வி அரசின் – ஜனாதிபதி செயலகத்தின் – வரி விலக்கு அறிவிப்பை அடுத்து எழுப்பப்பட்டது.

ஆகையினால், வரி செலுத்தி, இறக்குமதி செய்து, சந்தையில் இருக்கும் இந்தப் பொருள்களை வர்த்தகர்கள் விற்றுத் தீர்க்கும் வரை கால அவகாசம் வழங்குவதே முறை என்று பொதுமக்கள் தரப்பில் ஒரு சமாதானம் கூறப்பட்டது. நாமும் இப் பத்தியில் அதனை மேம்போக்காகச் சுட்டிக்காட்டியிருந்தோம்.

ஆனால், இப்போது வரி விலக்கு அறிவித்து – அளித்து – பதினைந்து நாள்கள் கடந்தும் நிலைமை முன்னேறவில்லை.

சீனி கிலோ 85 ரூபா விற்க வேண்டிய இடத்தில் அது தொடர்ந்து 130 ரூபா வரை விலை போகின்றது. நூறு ரூபா விற்க வேண்டிய சின்ன வெங்காயம் 190 ரூபா வரை விற்கப்படுகின்றது.

இப்போது இறக்குமதி செய்யப்படும் சீனிக்கு கிலோவுக்கு ஆக இருபத்தியைந்து சதம் மட்டுமே வரி என்பது அரசுத் தரப்பின் வியாக்கியானம். அப்படியானால் சீனி விலை ஏன் குறையவில்லை? இதைக் கவனிக்காமல் நுகர்வோர் அதிகார சபை தூங்குகின்றதா என்று சில தரப்பினர் கேள்வி எழுப்புகின்றனர்.

சீனி, சின்ன வெங்காயம், ரின் மீன் போன்றவற்றுக்கான வரி விலக்குத் தொடர்பில் வர்த்தமானி அறிவிப்பு வந்துள்ளமை குறித்து நுகர்வோர் அதிகார சபை அறிந்துள்ளது.

*'ஆனால், அந்த அறிவிப்பை – வர்த்தமானி விளம்பரத்தை – மட்டும் வைத்துக் கொண்டு நாங்கள் வர்த்தகர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. இந்தப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்து, திட்டவட்டமாக அந்த விலைகளை அரச வர்த்தமானி மூலம் அரசு பிரகடனப்படுத்த வேண்டும். அப்படிப் பிரகடனப்படுத்தினால் அந்த விலைகளை மீறி விற்கும் வர்த்தகர்கள் தொடர்பில் நாம் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.'*
– என்கிறார்கள் அவர்கள்.

சீனி, சின்ன வெங்காயம் போன்றவற்றுக்கான வரிகளை அரசு விலக்கி இரண்டு வாரம் கடந்து விட்டது. ஆனால் அந்த வரி விலக்கு சகாயத்தின் அடிப்படையில் மேற்படி அத்தியாவசியப் பொருள்களின் புதிய விலைகள் யாவை என்பதை அரசு இன்றும் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் வர்த்தமானி மூலம் அறிவிக்கவேயில்லை.

ஆக, வரிவிலக்குப் பற்றிய அறிவிப்போடு, அதனடிப்படையில் சீனியை கிலோ 85 ரூபாபடியும், சின்ன வெங்காயத்தை கிலோ நூறு ரூபாபடியும் விற்க முடியும் என மேம்போக்காக அறிவித்து விட்டு வாளாவிருக்கின்றது அரசு – அதாவது, வெறுங்கை முழம்போடும் என்று கணக்குப் பண்ணியபடி.

ரின் மீன் விலை உச்சமாக இருப்பது இன்றைய நிலையில் மக்களுக்குப் பெரும் நெருக்கடி அல்ல. ஏனெனில், மீன் சந்தைகளைச் சுற்றி கொரோனா வைரஸ் இலகுவாகப் பரவுகின்றது என்ற எண்ணப்பாட்டில் மக்கள் மீன் சந்தைப் பக்கம் தலைவைப்பதைத் தவிர்த்து வருகின்றனர். அதனால் மீனவர்கள் கஷ்டப்பட்டுப் பிடித்த மீனை வாங்குவோர் குறைந்து விட்டது. மீனைச் சந்தைப்படுத்த முடியாத மீனவர்கள் அவற்றைக் கருவாடாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

மீனைச் சீண்டுவோர் குறைந்து விட்டதால் சந்தையில் அதன் விலை விழ்ந்து விட்டது. அதனால் உடனடியாக ரின் மீனைத் தேடும் அவலம் அல்லது அதற்கு கிராக்கி அதிகம் இல்லை.

ஆனால், வரிவிலக்கு அளிக்கப்பட்ட சீனி, சின்ன வெங்காயம் ஆகியவை விடயத்தில் அரசு அளித்த வரி விலக்குச் சலுகை மக்களை அடையவில்லை. அவற்றை இறக்குமதி செய்யும் பெரும் முதலாளிகளே அதனால் நன்மையடைந்துள்ளனர்.

இந்தப் பொருள்களுக்கு வரி விலக்கு அடிப்படையிலான புதிய சகாய விலையை வர்த்தமானி மூலம் கட்டுப்பாட்டு விலையாக அரசு அறிவித்தால் மட்டுமே அதன் பயன் மக்களை எட்டும்.

# ஒரு வருட காலத்துக்குள் புதிய அரசமைப்பு வரும்!

## கெஹலிய நம்பிக்கை



புதிய அரசமைப்பை உருவாக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருவதாக அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்–

20 ஆவது திருத்தச்சட்டத்தையும் புதிய அரசமைப்பையும் குழப்பிக் கொள்ளக் கூடாது.

எதிர்காலத்தில் முழுமையான புதிய அரசமைப்பே கொண்டுவரப்படும். இதற்கான 11 பேர் கொண்ட விசேட நிபுணர் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இந்தப் பணியை வேகமாகச் செய்து வருகின்றனர். 20 ஆவது திருத்தச்சட்டம் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவே கொண்டுவரப்பட்டது.

ஒரு வருடகாலத்திற்குள் புதிய அரசமைப்பு கொண்டுவரப்படுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனா பாதிப்புக்குள்ளான பலர் பஸ்களில் பயணம் மேற்கொண்டனர்!

## மக்களுக்கு எச்சரிக்கை

பஸ்களின் இலக்கங்கள் நன்கு தெரியக் கூடிய வகையில் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரச மற்றும் தனியார் பஸ் உரிமையாளர்களிடம் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண கோரிக்கை விடுத்துள்ளார்.

பேலியகொடை மீன் சந்தை மூலம் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட பலர் பொதுப்போக்குவரத்து சேவைகளில் பயணித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

எனினும் தாங்கள் பயணித்த பஸ்கள் எவை என்பதை அடையாளப்படுத்துவதற்காக அதன் இலக்கங்களை அவர்களால் நினைவுபடுத்திக் கூறமுடியாத நிலைமை உள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதன்காரணமாகவே, அரச மற்றும் தனியார் பஸ் துறையினரிடம் இந்தக் கோரிக்கையை முன்வைப்பதாகப் பொலிஸ் பேச்சாளர் கூறியுள்ளார்.

இதேநேரம், பஸ்களில் பயணிக்கும் பயணிகள், தாங்கள் பயணித்த பஸ்களின் இலக்கங்களை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

பஸ்களில் கொரோனா நோயாளர் பயணித்திருந்தால், அந்தப் பஸ்களில் பயணித்த ஏனையவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு அறிவித்தல்களை வழங்க தங்களுக்கு இலகுவானதாக இருக்கும் என்றும் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

# அலுவலக அடையாள அட்டை ஊரடங்குக்குப் பயன்படுத்தலாம்

அத்தியாவசிய சேவைப் பணியாளர்கள் ஊரடங்கு வேளையில் பயணிக்கும் போது தமது அலுவலக அடையாள அட்டையை ஊரடங்கு அனுமதிக்காகப் பயன்படுத்தலாம் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதன்படி சுகாதார சேவைகள், விமான நிலையம், வெளிவிவகார அமைச்சு, தீயணைப்பு திணைக்களம் மற்றும் வெகுஜன ஊடகம் ஆகிய துறைகளில் பணிபுரிவோரே தமது அலுவலக அடையாள அட்டையை ஊரடங்கு வேளை அனுமதிக்குப் பயன்படுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அவர்கள் தங்கள் பணியிடத்துக்குச் செல்லும் போதும் வெளியேறும் போதும் கொரோனா தொற்று சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# மொறட்டுவையில் 42 பேருக்கு தொற்று!

மொறட்டுவையில் மேற்கொள்ளப்பட்ட பீ.சீ.ஆர். பரிசோதனையை அடுத்து 42 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பேலியகொடை மீன் சந்தையில் இனங் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்தவர்களை இனங்கண்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போதே இவர்கள் அடையாளம் காணப்பட்டனர் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பரிசோதனையின் பின்னரே மொறட்டுவ பகுதிக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொரளையில் 20 பேருக்கும் கொட்டாஞ்சேனையில் 44 பேருக்கும் மட்டக்குளியில் 36 பேருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ். இந்துவிலிருந்து 179 பேர் பல்கலைக்கழகத்துக்குத் தகுதி!

யாழ்.இந்துக் கல்லூரியிலிருந்து 179 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகியுள்ளனர் என கல்லூரி நிர்வாகம் அறிவித்துள்ளது.

31 மாணவர்கள் பொறியியல் பீடத்துக்கும், 21 மாணவர்கள் மருத்துவ பீடத்துக்கும் தெரிவாகியுள்ளமையுடன் சகல துறைகளுக்குமாக மொத்தமாக 179 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகியுள்ளனர்.

புதிய பாடத்திட்டத்தின் கீழ் 107 பேரும் பழைய பாடத்திட்டத்தில் கீழ் 72 பேரும் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி பொலிஸாரால் கொரோனா விழிப்புணர்வு!

கிளிநொச்சி பொலிஸாரால் விசேட கொரோனா பாதுகாப்பு விழிப்புணர்வு செயற்திட்டம் இன்று (புதன்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி நகரில் சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பஸ்கள் சுத்திகரிக்கப்பட்டமையுடன், பொது மக்களை விழிப்பூட்டும் ஸ்ரிக்கர்களும் ஒட்டப்பட்டன.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி பொலிஸ் அத்தியட்சகர் தலைமை பொலிஸ் நிலைய அதிகாரி, பொலிஸ் உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள், சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இந்தியாவுடன் எல்லைப் பிரச்சினை அமெரிக்கா தலையிடவே கூடாது!

## சீனா கூறுகிறது

இந்தியாவுக்கும் தங்களுக்கும் இடையேயான எல்லைப் பிரச்சினையில் மூன்றாவதாக ஒரு நாடு தலையிட முடியாது என சீனா தெரிவித்துள்ளது.

இந்தியாவிற்கு விஜயம் செய்த அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மைக் பொம்பியோ, லடாக் பிரச்சினையை பற்றி குறிப்பிடும் போது, இந்தியா தனது இறையாண்மையையும் சுதந்திரத்தையும் காக்க எடுக்கும் முயற்சிகளுக்கு அமெரிக்கா உறுதியான ஆதரவை அளிக்கும் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக சீன தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

இந்தியாவும் சீனாவும் எல்லைப் பிரச்சினையை ராஜிய, இராணுவ பேச்சுகள் வாயிலாகத் தீர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளது.

கருத்து வேற்றுமைகளை சரி செய்யும் திறனும் அறிவும் இரண்டு நாடுகளுக்கும் உள்ளன எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.



# இந்தியா – அமெரிக்கா இடையே ஐந்து ஒப்பந்தங்கள் கைச்சாத்து!



இந்தியா – அமெரிக்கா இடையே பாதுகாப்புத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அடிப்படைத் தகவல் பரிமாற்றம் ஒத்துழைப்பு உட்பட 5 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

இந்திய, அமெரிக்க வெளிவிவகாரத்துறை மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சர்கள் இடையே கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நேரடி பேச்சு நடந்து வருகிறது. அந்தவகையில் இந்த ஆண்டுக்கான 2102 பேச்சு டெல்லியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்றது.

அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் மைக் பொம்பியோவுடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூட்டாக ஆலோசனை நடத்தினர்.

இந்த பேச்சுக்குப் பின்னர், இந்தியா – அமெரிக்கா இடையே அடிப்படை பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்பு உட்பட 5 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

அடிப்படை பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தம் மூலம் இரு நாடுகளும் இடையே இராணுவ ரீதியிலான பல்வேறு தகவல்கள், நடவடிக்கைகளை, தொழில்நுட்ப தகவல்களைப் பகிர சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அமெரிக்க இராணுவத் தரவுகளை இந்தியாவுக்கு வழங்க அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஒப்பந்தம் சீனா, பாகிஸ்தான் நாடுகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க இந்தியாவுக்கு உதவியாக இருக்கும். இரு நாட்டு வரைபட தரவுகளையும் பகிர்ந்துகொள்ள சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இரு நாடுகளுக்கு இடையே இராணுவ ஒப்பந்தங்கள், இராணுவ உபகரணங்கள் வழங்குதல், இரு நாடுகளும் இணைந்து இராணுவ, கடல்பரப்பு, வான் பரப்பு உள்ளிட்ட விவகாரங்களில் இணைந்து செயற்படுதல் மற்றும் அது தொடர்பான தகவல்களை பகிர்தல் என பல்வேறு முக்கிய ஒப்பந்தங்களில் கையெழுத்தாகியுள்ளது.

இந்த ஒப்பந்தங்கள் இந்தியா – அமெரிக்கா இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவதில் பெரும் பங்காற்றும் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

# கொரோனா வைரஸ் தொற்று காவிகளாகும் குழந்தைகள்!



கொரோனா வைரஸை குழந்தைகள் பரப்புவதற்கான சான்றுகள் கிடைத்துள்ளதாக ஐ.சி.எம்.ஆர் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தற்போது இறங்கு முகத்தில் செல்கின்றது. இருப்பினும் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே குழந்தைகள் வைரஸ் காவிகளாகவுள்ளமையால் ஐ.சி.எம்.ஆர். இயக்குனர் ஜெனரல் பல்ராம் பார்கவா செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், 17 வயதுக்கு உட்பட்டவர்களில் 8 வீதமானோருக்கே தொற்றுகள் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதுவே 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை எடுத்து கொண்டால் அது ஒரு சதவீதத்துக்கும் குறைவாகவே இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாலியல் அத்துமீறல் முயற்சி செருப்பால் அடித்த பெண்!

பெங்களூரில் தனக்கு பாலியல் துன்புறுத்தல் அளிக்க முயன்ற நபரை பெண் ஒருவர் செருப்பால் அடித்து விரட்டும் சிசிடிவி காட்சிகள் வெளியாகியுள்ளன.

ஜேசி நகரைச் சேர்ந்த அந்தப் பெண் கடந்த 26 ஆம் தேதி அதிகாலை 5 மணியளவில் பூஜைக்கு பூ பறிப்பதற்காக தனது தெரு வழியே தனியாக நடந்து சென்றுள்ளார்.

அப்போது அவரை வழிமறித்த மர்ம நபர் ஒருவர் பாலியல் சீண்டலில் ஈடுபட்டான். உடனடியாக தனது காலில் இருந்த செருப்பை கழற்றி அந்தப் பெண் அடிக்கத் தொடங்கவே, அவரை தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பியோடினான்.

# தெலுங்கானாவில் 9 பேரை கொலைசெய்தவருக்கு தூக்கு!

தெலுங்கானாவில் 9 பேரை கொலை செய்த நபருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தெலுங்கானா மாநிலம் கோரப்பட்ட என்ற பகுதியில் கிணற்றில் தள்ளி 9 பேரை கொலை செய்தவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஒரே குடும்பத்தை சேர்ந்த ஒன்பது பேருக்கு சாப்பாட்டில் மயக்க மருந்து கொடுத்து கிணற்றில் தள்ளிய சஞ்சய் என்பவனுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

கடந்த மே மாதம் நடைபெற்ற கொலை சம்பவத்தை அரங்கேற்றிய பீகாரை சேர்ந்த சஞ்சய் என்பவனுக்கு வாரங்கல் நீதிமன்றம் தூக்கு தண்டனை வழங்கியது.

# பீகார் சட்ட மன்றப் பேரவைத் தேர்தல் அவுரங்காபாத் பகுதியில் குண்டு மீட்பு!

பீகாரில் முதற்கட்ட தேர்தல் நடைபெறும் நிலையில் அவுரங்காபாத் திப்ரா பகுதியில் வெடிகுண்டுகள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா அச்சுறுத்தல் மற்றும் ஊரடங்கு சூழலுக்கு மத்தியில் பீகார் சட்டசபை தேர்தல் இன்று (புதன்கிழமை) ஆரம்பமாகியது. முதல்கட்டமாக 71 தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இதனை முன்னிட்டு பாதுகாப்பு பணிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக 30 ஆயிரம் மத்திய பாதுகாப்பு படை வீரர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் அவுரங்காபாத்தின் திப்ரா பகுதியில் இரண்டு வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

குறித்த வெடிகுண்டுகளை கைப்பற்றிய சி.ஆர்.பி.எவ். பொலிஸார் அவற்றை பாதுகாப்பாக செயலிழக்கச் செய்துள்ளனர். மேலும் இந்தப் பகுதியில் கண்காணிப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# குவைத்திலுள்ள தமிழக தொழிலாளரை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்க உத்தரவு!

## உச்சநீதிமன்று வழங்கியது

குவைத்தில் சிக்கியுள்ள தமிழகத் தொழிலாளர்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொரோனா பரவல் காரணமாக குவைத்தில் சிக்கியுள்ள தமிழகத் தொழிலாளர்களை மீட்டுக் கொண்டு வரவும், உணவு, மருத்துவம், சுகாதாரமான தங்கும் வசதி ஆகியவற்றைச் செய்து கொடுக்கவும் மத்திய அரசுக்கு உத்தரவிடக்கோரி வெளிநாடு வாழ் தமிழர்கள் நலச் சங்கம் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.



இந்த வழக்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. இதன் போது மத்திய அரசு சார்பில் வாதாடிய வழக்கறிஞர், ’குவைத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்டுக் கொண்டுவர அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. தூதரக ரீதியில் தாமதம் ஏற்பட்டுள்ளது. குவைத் நாட்டுக்குள் செல்ல பல்வேறு கட்டுப்பாடுகள் உள்ளன’ எனக் குறிப்பிட்டார்.

இதனையடுத்து நீதிபதிகள் ‘குவைத் நாட்டுக்குள் செல்ல கட்டுப்பாடுகள் இருக்கலாம். ஆனால், அங்கிருந்து வெளியேறி சொந்த நாட்டுக்கு திரும்ப விரும்பும் இந்தியர்களை மீட்பதில் என்ன சிக்கல் உள்ளது’? எனக் கேள்வி எழுப்பினர்.

அதனைத்தொடர்ந்து குவைத்தில் சிக்கியுள்ள தமிழக தொழிலாளர்களை மீட்க உரிய நடவடிக்கைகளை எடுக்க மத்திய அரசுக்கு உத்தரவிட்டு வழக்கு 4 வாரங்களுக்கு தள்ளிவைக்கப்பட்டது.

# ஆப்கனில் இருவேறு இடங்களில் கார் வெடிகுண்டுத் தாக்குதல்கள்




ஆப்கானிஸ்தானில் இருவேறு இடங்களில் நடந்த கார்க் குண்டுத் தாக்குதலில் 8 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

தலைநகர் காபூலில் குடியிருப்புப் பகுதியில் வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த கார் வெடித்து சிதறியதில் பொதுமக்கள் 3 பேர் உயிரிழந்தனர்.

இந்த வெடிகுண்டு தாக்குதலில் சுமார் 100 முதல் 200 மீற்றர் சுற்றுவட்டாரத்துக்குள் இருந்த வீடுகளின் ஜன்னல் உடைந்து சேதமாகின எனக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை கோஸ்ட் மாகாணத்தில் பொலிஸ் படைதளத்தில் நடந்த மற்றொரு வெடிகுண்டு தாக்குதலில் 5 பொலிஸார் உயிரிழந்தமையோடு 30 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ஏறக்குறைய 6 ஆயிரம் ஆப்கானிய பொதுமக்கள் கொல்லப்பட்டனர் அல்லது காயமடைந்தனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

அரசாங்கப் படைகளுக்கும் தலிபான் போராளிகளுக்கும் இடையிலான மோதலை முடிவுக்கு கொண்டுவருவதற்கான முயற்சிகள் இடம்பெற்ற போதிலும் அப்பகுதியில் மீண்டும் மோதல்கள் தலை தூக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடுமையான கட்டுப்பாடுகளை ஜேர்மன், பிரான்ஸ் அறிவிப்பு!



ஐரோப்பா முழுவதும் கொரோனாத் தோற்றால் ஏற்படும் இறப்புகள் ஒரு வாரத்தில் கிட்டத்தட்ட 40 வீதம் உயர்ந்துள்ளமையால், இன்று புதன்கிழமை மேலும் கடுமையான கட்டுப்பாடுகளை அறிவிக்க ஜேர்மனியும் பிரான்ஸும் தயாராக உள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் அதிபர் அங்கேலா மேர்க்கல் உணவகங்களையும் மதுபானநிலையங்களையும் மூடுவதைப் பற்றி விவாதிக்க மாநில பிரதமர்களை சந்திக்க உள்ளார்.

ஆனால் பாடசாலைகள் மற்றும் ஆரம்ப பாடசாலைகளை திறந்த நிலையில் வைத்திருக்கும் அதே நேரத்தில் மக்கள் தங்கள் சொந்த வீட்டு உறுப்பினர்களுடன் மட்டுமே பொது வெளியில் செல்ல அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

பிரான்ஸில் ஒரு நாளைக்கு 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புதிய நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் இன்று புதன்கிழமை மாலை ஒரு தொலைக்காட்சி உரையை நிகழ்த்துவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் நாட்டின் பெரும்பகுதி முழுவதும் ஊரடங்கு உத்தரவு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மக்களின் நடமாட்டங்கள் தொடர்பாக மேலும் தடைகளை அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தாலி மற்றும் ஸ்பெயினில் இதேபோன்ற நகர்வுகளைத் தொடர்ந்து, இந்த நடவடிக்கைகள் பாடசாலைகள் மற்றும் பெரும்பாலான வணிக நிறுவங்களின் கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்படும் எனக் கூறப்படுகின்றது.

குறிப்பாக மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் கொரோனா தொற்று பரவ தொடங்கியதில் இருந்து விதிக்கப்பட்ட மொத்த காட்டிலும் இது கடுமையான தாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# முஸ்லிம்களின் உள்விவகார தலையீடுகளை பிரான்ஸும் ஐரோப்பாவும் நிறுத்தல் வேண்டும்!

## எச்சரிக்கிறது ஈரான்

பிரான்ஸும் ஐரோப்பாவும் முஸ்லிம்களின் உள் விவகாரங்களில் தலையிடுவதை நிறுத்த வேண்டும் என ஈரானிய ஜனாதிபதி ஹசன் ரௌஹானி தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஸ்திரத்தன்மை மற்றும் அமைதி இருக்கும்போதே அனைத்து மக்களும் ஒன்றாக வாழ முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லீம் விவகாரங்களில் மேற்கத்தியர்களின் கொடுமை மற்றும் முறையற்ற தலையீட்டால் அனைத்து பிரச்சினைகளும் வெறுப்பும் எழு



கின்றன என்றும் ஹசன் ரௌஹானி தெரிவித்துள்ளார்.

மேலும் நபிகள் நாயகத்தை அவமதிப்பது கலை அல்ல என்றும் அது வன்முறையை ஊக்குவிக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே, ஜனநாயகம் மற்றும் கலை பற்றிய கூற்றுக்கள் தற்செயலாக வன்முறையை ஊக்குவிப்பது ஆச்சரியமாக இருக்கிறது என்றும் ஹசன்ரௌஹானிகுறிப்பிட்டுள்ளார்.

# ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சருக்கு கொரோனா!



கொரோனா தொற்று உறுதியான ஒருவருடன் பழகிய ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.


செர்ஜி லாவ்ரோவ் வின் உடல் நிலை நன்றாக உள்ளதாகவும், கொரோனா தொற்று தொடர்பில் எந்தவிதமான அறிகுறிகளையும் அவர் வெளிப்படுத்தவில்லை என வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும், ஒக்ரோபர் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா மற்றும் செர்பியா ஆகிய நாடுகளுக்கான உத்தேசிக்கப்பட்ட உத்தியோபூர்வ விஜயங்களையும் செர்ஜி லாவ்ரோவ் ஒத்தி வைத்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக உலகில் நான்காவது மிக அதிகமான நோயாளிகள் அடையாளம் காணப்பட்ட நாடாக ரஷ்யா உள்ளது.

அங்கு கொரோனாத் தொற்றாளர்கள் மொத்தம் 15 லட்சத்து 47 ஆயிரத்து 774 ஆக அதிகரித்துள்ளதுடன் 26 ஆயிரத்து 589 இறப்புகள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரான்ஸ் கேலிச் சித்திரத்துக்கு துருக்கி அதிகாரிகள் கண்டனம்!



பிரான்ஸ் பத்திரிக்கை ஒன்றில் துருக்கிய ஜனாதிபதி தொடர்பாக வெளியான கேலிச்சித்திரத்துக்கு துருக்கிய அதிகாரிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த செயற்பாடானது அதன் கலாசார இனவெறி மற்றும் வெறுப்பை பரப்புவதற்கான அருவருப்பான முயற்சி என்றும் குற்றம்சாட்டியுள்ளது.

பேச்சு சுதந்திரம் குறித்த பாடத்தில் மாணவர்களுக்கு கேலிச்சித்திரத்தைக் காட்டிய பிரான்ஸ் ஆசிரியர் ஒருவர் கொல்லப்பட்ட விவகாரத்தைத் தொடர்ந்து துருக்கி மற்றும் பிரான்ஸுக்கு இடையில் மோதல் ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக டுவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ள துருக்கிய ஜனாதிபதியின் ஊடகப்பேச்சாளர், எந்தவொரு நம்பிக்கையையும், புனிதத் தன்மையையும் மதிக்காத பிரான்ஸ் பத்திரிகையில் எங்கள் ஜனாதிபதி பற்றிய வெளியீட்டை நாங்கள் கடுமையாக கண்டிக்கிறோம். - என பதிவிட்டுள்ளார்.

# ஒரேஞ்ச் கவுண்டியில் பரவிய காட்டுத்தீ மின் சாதனங்களால் ஏற்பட்டிருக்கலாம்!

அமெரிக்க வனப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயால் சுற்றுச்சூழலுக்கு பெரும் அச்சுறுத்தல் எழுந்துள்ள நிலையில் அப்பகுதிகளில் குடியிருக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தெற்கு கலிபோர்னியாவில் ஏற்பட்ட இரு காட்டுத் தீ காரணமாக நேற்று மட்டும் இரண்டு தீயணைப்பு வீரர்களைக் கடுமையாகக் காயமடைந்துள்ளமையுடன் 90 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டனர்.

இந்நிலையில் கவுண்டியில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீ மின் சாதனங்களால் ஏற்பட்டிருக்கலாம் என்ற ரீதியில் இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

அத்தோடு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கிட்டத்தட்ட 19 ஆயிரம் வீடுகள் மற்றும் வணிக நிறு



வனங்களுக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னியாவின் சாண்டா அனா பாலைவனப்பகுதியில் பற்றிய காட்டுத் தீ அருகில் உள்ள ஒரேஞ்ச் கவுண்டிக்கும் பரவியது.

இந்த காட்டு தீ நேற்று செவ்வாய்க்கிழமை உள்ளூர் நேரப்படி நண்பகலில் மேலும் 12 ஆயிரம் ஏக்கருக்கு பாதிப்பை ஏற்படுத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர 14 ஹெலிக்கொப்டர்களுடன் 750 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்ற போதும் தற்போதுவரை 5 வீதம் மட்டுமே கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெற்றுக்கார்பன், பேனா குழாய்கள், பற்தூரிகைகள் மீள் சுழற்சி நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பித்து வைப்பு

கொழும்பு, ஒக்.28

பாவனையின் பின் ஒதுக்கப்படும் வெற்று கார்பன், பேனா குழாய்கள் மற்றும் பற் தூரிகைகள் மீள் சுழற்சி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்காக தயாரிக்கப்பட்ட முதலாவது கொள்கலன் கடந்த 26 ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த அமரவீரவால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் இந்நிகழ்ச்சித்திட்டம் 'நாம வளம்பெற்று நாட்டை வளப்படுத்துவோம்' என பெயரிடப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு பாடசலைகளில் இருந்து ஒதுக்கப்படும் கார்பன், பேனா குழாய்கள் சுமார் 80 கிலோ கிராம்களாகும். வருடமொன்றுக்கு 29 ஆயிரம் கிலோ வுக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது. அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் இருந்து ஒதுக்கப்படும் அளவு இதுவரையில் கணக்கிடப்படவில்லை.

பாவனையின் பின்னர் ஒதுக்கப்படும் பேனா மற்றும் பற் தூரிகைகள் உக்குவதற்கு 100 முதல் 500 வருடங்கள் செல்வதாக சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அனைத்து பாடசாலைகளுக்கும் விசேட கொள்கலன்களை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 'வெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் பிளாஸ்டிக்' நிறுவனம் இவற்றைக் கொள்வனவு செய்ய முன்வந்துள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் நடைமுறைப்படுத்துவதை கட்டாய மாக்குவதற்காக அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.



# கொரோனாவால் நேற்று உயிரிழந்தோர் முழுமையான விவரங்கள் வெளியாகின

## அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.28

கொழும்பு தேசிய வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்ட நிலையில், மரணித்த இரண்டு பேரின் சடலங்களுக்கு, சட்டவைத்திய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பீ.சீ.ஆர். பரிசோதனைகளில், அவர்களுக்கு கொரொனா தொற்று இருந்தமை உறுதியானதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வாழைத்தோட்டத்தைச் சேர்ந்த 19 வயதான இளைஞர் ஒருவருக்கும் கொழும்பு 2 ஐச் சேர்ந்த 87 வயதான பெண் ஒருவருக்குமே இவ்வாறு இறப்பின் பின்னர் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாக அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவர்கள் இருவரும் மரணிப்பதற்கு முன்னர் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தனர் எனவும் அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதேநேரம் குறித்த 19 வயதான இளைஞர், பிறந்தது முதலே விசேட தேவையுடையவராக இருந்தவர் எனவும் கூறப்படுகிறது.

இதேநேரம் கொரோனா தொற்றால் ஐ.டி.எச் வைத்தியசாலையில் உயிரிழந்த நபர், ஜா - எல பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய ஆணொருவரெனசுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், அவர்களுடன் தொடர்புடையவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இலங்கையில் இதுவரையில் 19 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மேல் மாகாணத்தில் 131 பேர் கைதாகினர்!

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கையில் 131 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



பொலிஸ் தலைமையகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று(செவ்வாய்கிழமை) காலை 06 மணி முதல் இன்று அதிகாலை 05 மணிவரையான காலப் பகுதியில் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. சட்டவிரோத மதுபானங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் இவர்களில் 50 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

# தனிமைப்படுத்தல் முடித்து 73 பேர் வெளியேறினார்கள்

முப்படையினரால் நடத்தப்படும் 08 தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தலை நிறைவுசெய்த 73 பேர் இன்று (புதன்கிழமை) வெளியேறியுள்ளனர்.

இதுவரை, தனிமைப்படுத்தலை நிறைவு செய்து 58 ஆயிரத்து 396 பேர் வீடு திரும்பியுள்ளனர்.

முப்படையினரால் நடத்தப்படும் 75 தனிமைப்படுத்தல் நிலையங்களில் தற்போது 7 ஆயிரத்து 530 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

# மன்னார் மாவட்டத்தில் இதுவரை 11 பேருக்குக் கொரோனா உறுதி!

## பிராந்திய சுகாதார பணிப்பாளர் த.விநோதன்




மன்னார் மாவட்டத்தில் கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் இன்று வரை 11 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற ஊடகசந்திப்பின் போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

மினுவாங்கொடை கொரோனா கொத்தணி பரவல் ஆரம்பித்த பின்னர் மன்னார் பட்டித்தோட்டம் பகுதியிலும், பேலியகொடை மீன்தொகுதி கொரோனா கொத்தணியுடன் தொடர்புடைய இருவர் கடந்த ஞாயிறு மற்றும் திங்கள் ஆகிய தினங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிறு மற்றும் திங்கள் ஆகிய இரு தினங்களிலும் அடையாளம் காணப்பட்ட 2 கொரோனா தொற்றாளர்கள் கொழும்பில் இருந்து மன்னாருக்கு வந்த போக்குவரத்து விவரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதனடிப்படையில் கடந்த 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 11.20 மணியளவில் கொழும்பு மத்திய பஸ் நிலையத்தில் இருந்து மன்னார் நோக்கி பயணித்த (ரத்னா ரவல்ஸ்) என்ற தனியார் பஸ்ஸில் பயணித்து 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.45 மணியளவில் மன்னார் பஸ் நிலையத்தில் இருந்து தலைமன்னார் நோக்கி இலங்கை அரச பஸ்ஸில்; பயணத்தை மேற்கொண்ட பயணிகள் மற்றும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பு மத்திய பஸ் நிலையத்தில் இருந்து மன்னார் நோக்கி பயணித்த தனியார் பஸ் எச்.எஸ். ரெவல்ஸ் ஊடாக பயணித்த மக்களும் உடனடியாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும்.

இந்த பஸ்களில் பயணித்த மக்கள் உடனடியாக 0718474361 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி தமது இருப்பிடத்தை தெரியப்படுத்திக் கொள்ளுமாறு மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் கடந்த ஒக்ரோபர் மாதத்தில் இருந்து இன்று வரை 995 பீ.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் மேற்படி 11 நபர்களும் கொரோனா தொற்று உள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே தொற்று உள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்ட 11 பேரில் 2 பேர் சிகிச்சையின் பின்னர் இரனவல வைத்தியசாலையில் இருந்து தமது வீடுகளுக்கு சென்றுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரச மருந்தக ஊழியருக்கு தியத்தலாவையில் தொற்று!

கொழும்பு, ஒக்.28

தியத்தலாவையில் அரச மருந்தகமொன்றின் ஊழியரொருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டமையடுத்து அந்த மருந்தகம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

அத்துடன் அந்த மருந்தகத்தில் கடமையாற்றிய அனைவரையும் பி.சி.ஆர். பரிசோதனைக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அந்தப் பகுதி சுகாதாரப் பரிசோதகர் எஸ். சுதர்சன் தெரிவித்தார்.

இதையடுத்து மருந்தகத்திற்கு கடந்த சில தினங்களில் மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்ள வந்தவர்களையும் இனம் காணும் செயற்பாடுகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என சுகாதாரப் பரிசோதகர் எஸ். சுதர்சன் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கான தூதரகங்களை இரு நாடுகளில் திறக்க அனுமதி!

## வழங்கியது அமைச்சரவை

கொழும்பு, ஒக்.28

முக்கிய இரு நாடுகளில், இலங்கைக்கான தூதரகங்களைத் திறப்பதற்கான திட்டத்துக்கு அமைச்சரவையில் அனுமதி கிடைக் கப்பெற்றுள்ளது.

ருமேனியா மற்றும் ஸ்பைன் நாடுகளில் இவ்வாறு இலங்கைக்கான தூதரகங்களை திறக்கப்படவுள்ளன.

வெளிவிவகார அமைச்சரால் முன்வைக்கப்பட்ட குறித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமையும் குறிப்பிடதக்கது.

மேலும், அந்த நாடுகளுடனான உறவினை பலப்படுத்திக் கொள்ளும் நோக்குடனேயே இந்தத் திட்டம் ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.10.2020 இல் வெளியிடப்பெற்றது.